2022 மே 10]

அதன்படி விரைவில் பணிகள் துவங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, சந்திரபாடி கிராமத்தின் நண்டலாற்றின் இருபுறமும் கருங்கல் தரை அமைத்து கடல் கழிமுகப் பகுதியை ஆழப்படுத்தி, படகுகளை நிறுத்தும் வசதிகளை ஏற்படுத்த தேவையிருப்பின் ஆய்வு செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைகளைப் பெற்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 254, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

254—

சுற்றுச் சுவர்

***475—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரிக்கலாம்பாடி ஊராட்சியில் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளியின் மாணவர் விடுதிக்கு சுற்றுச் சுவர் மற்றும் பாதை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரிக்கலாம்பாடி ஊராட்சியில் செயல்பட்டுவரும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிக்கு சுற்றுச்சுவர் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இவ்விடுதிக்கான பாதையினைச் சீரமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

[2022 மே 10

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கரிக்கலாம்பாடியில்* compound *சுவர் கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். நிதி ஒதுக்கப்பட்டாலும், அருகாமையில் இருக்கின்ற நிலத்தின் உரிமையாளர்கள், இடத்தினை அளந்துவிட வேண்டுமென்று தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துறை அதிகாரிகள், நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலம் இடத்தினை அளந்து,* compound *சுவர் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரிக்கலாம்பாடி ஊராட்சியில் இருக்கின்ற மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதியின் பாதை ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கின்றது. அதுசம்பந்தமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில், ஆணையர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாணவ, மாணவியரின் நன்மைக்காக, மாவட்ட ஆட்சியர் அவர்களின்மூலம் அந்தப் பாதை சீரமைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சாலை ஊராட்சி ஒன்றியச் சாலை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கட்டடங்களுக்கு* compound *சுவர் அமைப்பதற்கு, 100 நாள் வேலை திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுகிறது. ஆனால், அதை அளந்து கொடுக்கக்கூடிய சூழ்நிலை இல்லாத நிலை இருக்கிறது. குறிப்பாக, ஆரம்பப் பள்ளிகளுக்கு மட்டும்தான் இந்த 100 நாள் வேலை திட்டத்தில்* compound *சுவர் அமைக்கப்படுகிறது.*

முற்பகல் 10-25

உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் ஆகியவற்றிற்கெல்லாம்

TRUTH ALONE TRIUMPHS

2022 மே 10]

compound wall *அமைப்பதற்கு உள்ளாட்சித் துறைமூலம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அதற்கான நிதியை ஒதுக்கித் தரலாமென்று அந்தத் துறை அதிகாரிகள் குறிப்பிடுகிற காரணத்தால், அவர்களுக்கு நினைவூட்டினால், அவர்கள் அத்தனை பேரும் நிதி ஒதுக்கித் தர தயாராக இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துறை அதிகாரிகள் இதில் அக்கறை எடுத்துக்கொண்டு செயலாற்றி, அப்படிப்பட்ட பணிகளை முடித்துத் தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச் சுவர் அமைப்பதற்கு ரூ.32,56,000/- செலவாகும் என பொதுப் பணித் துறையினரால்* estimate *தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுத்தால், உடனடியாக அந்த வேலை செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியிலுள்ள தரைதளம், குடிநீர்த் தொட்டி, ஜன்னல் கதவுகள் ஆகியவை பழுதடைந்துள்ளன. பழுதை நீக்கிடவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி என்பது திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூருக்குத்தான். கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உள்ள நிதி ஆதாரத்தின் அடிப்படையில்,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் படிக்கக்கூடிய ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு தங்கும் விடுதி கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்தில் 1,354 விடுதிகள் இருக்கின்றன. அதில், 1,264 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இப்போது 34 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. மீதமுள்ள புதிய விடுதிகளைக் கட்ட வேண்டுமென்று சொன்னால், இருக்கின்ற நிதி ஆதாரத்தைப் பார்த்தால், இந்த ஆண்டு பட்ஜெட்டில் அரக்கோணம் இடம்பெறவில்லை. இருப்பினும், எதிர்காலத்தில் அதுபற்றி அரசு பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, இதுசம்பந்தமான முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

255—

மின் இணைப்பு

***1942—திரு. A.J. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—